DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 174/2019**

**CNR.No: TNTH06-000311 -2021 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : **குழந்தைதெரஸ்** | Town | **அனுமந்தன்பட்டி** |
| Husband Name | : **சகாயம்** | Occupation | : |
| Age | : | **DW1** | |

நாள் :24.01.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) வழக்கு சொத்தை நான் எந்த ஆண்டு கிரையம் பெற்றதாக சொல்கிறேன் என்றால் 2018 ஆம் ஆண்டு கிரையம் பெற்றேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வீட்டிலேயே டெய்லரிங் கடை நடத்தி வருகிறேன். என் முன்பு காட்டப்படும் பி.வாசஆ.2 ஆவணமான 2.9.1974 தேதியிட்ட ஈடு கடன் ஆவணத்தில் வாதி அருளானந்தம் அவருக்கு சொந்தமான வழக்கு சொத்தினை ஈடுகடன் வைத்திருப்பதாக பதிவாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. என் முன்பு காட்டப்படும் பிவாசாஆ.7 ஆவணமான 09.07.1973 தேதியிட்ட வாதி, சின்னதாயம்மாள் என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஆவணத்தில் வாதி வழக்கு சொத்தினை ஈடுகடனாக எழுதிக் கொடுத்ததாக பதிவாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

2) பிவாசாஆ.7 ஆவணத்தில் சொத்து விபரத்தில், 1.2/29 மனைக்கு மால் கிழக்கு வீதி, வடக்கு எனது மனை, மேற்கு ஞானபிரகாசம் பிள்ளை வீடு, தெற்கு ஆசீர்வாதம் பிள்ளை வீடு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட பிவாசாஆ.2 ஆவணத்தில் சொத்து விபரத்தில் கிழக்கு, வடக்கு தெரு , தெற்கு என்கைவசம் உள்ள மனை, மேற்கு ஞானபிரகாசம் மனை என சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு அந்த ஈடுகடன் ஆவணம் பற்றி தெரியவில்லை. எனக்கு ஈடுகடன் மற்றும் ஒத்தி ஆவணங்களுக்கான வித்தியாசம் குறித்து தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிவாசாஆ.2, 7 ஆவணங்களுக்குரிய ஈடு கடன் பத்திரங்களின் படி ஈடு கடன்

வைக்கப்பட்ட மனு சொத்தினை வாதி அதற்குரிய தொகையை செலுத்தி மீட்டு மனுச்சொத்தினை அவரே அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

3) பி.வாசாஆ 2, 7 ஆவணங்களின் தரப்பினர்கள் யாரும் வாதிக்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. வாதி பி.வாசாஆ 2, 7 ஆவணங்களுக்குரிய ஈடு கடன் தொகையை திரும்ப செலுத்தி வழக்கு சொத்தினை அவரே அனுபவித்து வந்தார் என்றாலும், இந்த விவரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் நான் அதனை தெரியாது என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட 03.01.1968ம் தேதியிட்ட பிவாசாஆ10 ஆவணத்தில் ஏ செட்யூல் சொத்துக்கள் மரியஅருள்பாக்கியம் பிள்ளை என்பவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு பழைய ஆவணம் பற்றி தெரியவில்லை.

4) வழக்கு சொத்து உள்ளடங்கிய சொத்துக்களைப்பொறுத்து 03.01.1968 அன்று மரியஅருள் பாக்கியம்பிள்ளை, பால்ராஜ் , வாதி அருளானந்தம் ஆகிய முவரும் தங்களுக்குள் பாகப்பிரிவினை ஆவணம் எழுதிக்கொண்டனர் என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது. மேற்படி, பிவாசாஆ.10 ஆவணத்தின் படி ஏ செட்யூல் சொத்தானது மரிய அருள் பாக்கியம் பிள்ளைக்கும் , பி செட்யூல் சொத்தானது பால்ராசுக்கும் , சி செட்யூல் சொத்தானது வாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு அந்த விவரங்கள் தெரியாது . எனக்கு மேற்படி பாகப்பிரிவினை பற்றிய விவரங்கள் நன்கு தெரிந்தும் அது தொடர்பாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்தும், பின்னிட்டு நான் அதனை வேண்டுமென்றே தெரியாது என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5) பிவாசாஆ10 ஆவணத்தில் பி செட்யூல் சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்து விபரத்தில் மேற்படி கிராமம் 1வது வார்டு, 1வது பிளாக்கில் 48 நிர் வீடாக குறிப்பிட்டு, அதில் மாலாக கிழக்கே வீதி, தெற்கே புலவர் வகையறா வீடு, மேற்கே ஞானபிரகாசம் வீடு, வடக்கு சி பாக வீடு என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல பிவாசாஆ10 ஆவணத்தில் பி செட்யூல் சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்து விபரத்தில் மேற்படி கிராமம் 1வது வார்டு, 1வது பிளாக்கில் 48 நிர் வீடாக குறிப்பிட்டு, அதில் 3 தாக்குகளாக குறிப்பிட்டும் 3 தாக்குகளுக்கும் சேர்த்து கிழக்கும், வடக்கும் வீதி என்றும், மேற்கு ஞானபிரகாசம் மனை, தெற்கு பி பாகம் மனை என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் நான்கு மால் விபரம் சரியாகத்தான் உள்ளது, வீடு பற்றி எனக்கு தெரியவில்லை, 1968 ஆவணம் குறித்து எனக்கு

சரியாக தெரியவில்லை. 1968ம் வருடத்திய பிவாசாஆ 10 ஆவணத்தின்படி ஏ செட்யூல் சொத்தாக மரியஅருள்பாக்கியம்பிள்ளை அடைந்த சொத்தினைத்தான் அவர், அவரது மகளாக மேரியம்மாள் பெயரில் தான பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரிதான்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

(ஓ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.